செ.வெ.எண்:36 நாள்:20.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், பணிபுரியும் பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம் குறித்து அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

தமிழக அரசின் அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் மானியம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரும் 22ஆம் தேதி முதல் விநியோகம் செய்யப்பட உள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அளிக்கும்போது ஆதார் மற்றும் ஓட்டுநர் உரிம விபரங்களை தெரிவிப்பது கட்டாயம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அம்மா இருசக்கர வாகன திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. அதன் விபரம் - அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் இருசக்கர வாகனம் பெறுவதற்கான மானியம் அளிக்கப்பட உள்ளது. அதன்படி, ரூ.25,000/- அல்லது வாகனத்தின் விலையில் 50 சதவீதம் ஆகியவற்றில் எது குறைவோ அது வழங்கப்படும் இத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்களே தங்களது வாகனத்தை தேர்வு செய்யலாம். மேலும் வாகனத்தை பெற ரிசர்வ் வங்கியால் அதிகாரம் அளிக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் பெறலாம். 125c.c.திறன் வரையிலான வாகனத்தை மட்டுமே வாங்க வேண்டும்.

பணிபுரியும் மகளிர் : இருசக்கர வாகன திட்டமானது பணிபுரியும் மகளிருக்கு மட்டுமே அளிக்கப்படும் அமைப்பு மற்றும் அமைப்பு சாரா நிறுவனங்களில் பதிவு செய்த பெண்கள், வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றுவோர், சுயமாக தொழில் செய்யும் பெண்கள், அரசு உதவி பெறும் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசு திட்டங்களில் பணியாற்றுவோர், மாவட்ட கற்றல் மையம், கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஆகியவற்றில் பணியாற்றுவோர் இந்த திட்டத்தின் கீழ் இருசக்கர வாகனம் பெற விண்ணப்பிக்கலாம்.

வயது என்ன? : இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் மானியம் பெற 18 வயது முதல் 40 வயது வரையில் ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். அவர்களது ஆண்டு வருமான அளவு ரூ.2,50,000/- ஐ தாண்டக்கூடாது. மிகவும் பின்தங்கிய பகுதிகள், மலை பகுதிகள், கணவனால் கைவிடப்பட்டோர், கணவனை இழந்தோர், மாற்றுத்திறனாளிகள், 35 வயதை தாண்டிய திருமணம் ஆகாத பெண்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்கள் கிடைக்குமிடம் : விண்ணப்பங்களுக்கு எந்த கட்டணமும் இல்லை. அவற்றை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், பேரூராட்சி அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் விண்ணப்பங்கள் கிடைக்கும்.

காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை விண்ணப்பங்கள்அளிக்கப்படும். விண்ணப்பங்களை வரும் 22 ஆம் தேதி முதல் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை பிப்ரவரி 5 ம்தேதி மாலை 5.00 மணி வரை சமர்ப்பிக்கலாம், அன்றே கடைசி நாளாகும். மாவட்ட அளவிலான கள ஆய்வு பணிகள் பிப்ரவரி 15-க்குள் முடிக்கப்படும்.

தேர்வு செய்ய குழு : பயனாளிகளை தேர்வு செய்ய மாவட்ட அளவில் 2 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதாவது கிராமப்புறம் மற்றும் நகர்புறம் என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ள 2 குழுக்களுக்கும் மாவட்ட ஆட்சியரே தலைவராக இருப்பார். வாகனத்திற்கான மானியமானது பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக சேர்க்கப்படும் என்று வழிகாட்டி நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

என்னென்ன ஆவணங்கள் : இருசக்கர வாகனத்திற்கான மானியம் பெறுவோர் சில ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகிறது. அதன்படி வயதிற்கான சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ்(ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை இவைகளில் ஏதேனும் ஒன்று) ஓட்டுநர் உரிமம், வருமான சான்றிதழ் வேலை அளிப்பவரிடமிருந்து பெற வேண்டும். வேலையின் தன்மை குறித்த சான்றிதழ் ஆதார் அட்டை, கல்விக்கான சான்றிதழ் (8 ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்) கடவு சீட்டு அளவு புகைப்படம், ஜாதி சான்றிதழ் (தாழ்த்தப்பட்ட பழங்குடியின வகுப்பினராக இருந்தால்) ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) அ.லலிதா, உதவி இயக்குநர் ஊராட்சிகள் க.பழனிசாமி, உதவி திட்ட அலுவலர்கள், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.